R 2753 (page 6)

# இலக்கை நோக்கித் தொடருதல்

## PRESSING TOWARD THE MARK.

"சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." - பிலி 3:13,14

நாடப்படுவதற்கும், அடையப்படுவதற்குமான குறிப்பிட்ட இலக்கையோ அல்லது பரிசையோ குறித்துப் பெயர்ச்சபைகளில் உள்ளவர்கள் தெளிவாய் அறிந்திருக்கவில்லை. கற்பனை பண்ணப்பட்ட நித்தியத்திற்குரிய சித்திரவதையின் பயத்தினாலும், நடுக்கத்தினாலும், பயங்கரத்தினாலும் பெரும்பான்மையினர் தொட்டில் முதல் கல்லறை வரையிலும் பயந்து ஓடிக்கொண்டிருக்கின்றனர். மீதமான கர்த்தருடைய ஜனங்களோ, தெய்வீக வார்த்தையின் மூலமாக பரிசுத்த ஆவியின் வழியாக, தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப் பெற்ற வர்களாக, இந்தச் சுவிசேஷயுகத்தில், தெரிந்தெடுக்கப்பட்ட சபைக்கு முன்னதாகத் தேவன் முன்வைத்துள்ள மாபெரும் பரிசைப் பற்றிய காட்சியைச் சற்றுக் காணமுடிந்தவர்களாய் இருக்கின்றனர். மாம்சீக கண்கள் கண்டிராததும், செவிகள் கேட்டிராததும், மனுஷனுடைய இருதயத்தில் தோன்றியிராததும், தேவனால் தம்முடைய ஆவியின் மூலம் சபைக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான இந்த மகிமையான காட்சியினால் சபை பேரார்வம் அடைவதில் ஆச்சரியம் அடைவதற்கு ஒன்றுமில்லை. இன்னுமாக இவர்கள் பரிசை அடைவதற்கான இலக்கைக் காட்டிலும், பரிசின்மேல் அதிகம் கவனம் காட்டினாலும் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை.

R2753 : page 7

இவர்கள் பேரார்வதத்தினாலும், தெய்விக அன்பு பற்றின மதிப்புணர்வினாலும் நிரம்பிக் காணப்படுவதினால், இவர்கள் நித்தியமான சித்திரவதைக் குறித்தப் பயத்தை இழந்துள்ளனர் மேலும் இந்த உபதேசம், தேவனுடையதாய் இராமல், சாத்தானுடையதாய் இருக்கின்றது என்றும், பரிசுத்த ஆவியின் மூலம் வராமல், மனுஷனிடமிருந்து வருகின்றது என்றும், வேதவாக்கியங்களில் இடம்பெறும் பரிசுத்த ஆவியினால் ஏவப் பட்டு எழுதப்பபட் போதனைகளாய் இராமல், இருண்ட யுகத்தின் போதனைகளாய் இருக்கின்றது என்றும் அறிந்துவிட்டனர். மேலும் தேவனுடைய குணலட்சணம் மற்றும் திட்டத்திற்கு எதிரான இந்தத் தூஷணத்திற்கு ஆதரவளிப்பது போன்று தோற்றமளிக்கும் சில வேதவாக்கியங்கள் உவமைகளாகவும், அடையாளவார்த்தைகளாகவும், மறைபொருட்களாகவும் இருந்தது என்றும், அவ்வேதவாக்கியங்களுக்கான இந்தத் தவறான வியாக்கியானங்களானது பொதுவான சில வேத மொழியாக்கங்களில் ஏறக்குறைய பூசிமெழுகப்பட்டுள்ளது என்றும் கூட இவர்கள் அறிந்துவிட்டனர்.

இந்தச் சபை வகுப்பார், "பரிசுக்காக ஓடுவதை" குறித்துச் சிந்திப்பதும், பேசுவதும் இயல்பே மற்றும் பரிசை நோக்கி ஓடாமல், இலக்கை நோக்கியே ஓட வேண்டும் என்றும், பரிசானது நாம் அடைவதற்கு அப்பாற்பட்டது என்றும், ஆகவேதான் அப்போஸ்தலன் "நான் இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று குறிப்பிடுகின்றார் என்றுமுள்ள உண்மைகளை அதிகம் கவனிக்கத் தவறிவிடுவதும் இயல்பே. தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கெனத் தேவன் வைத்துள்ள, குணலட்சணத்திற்கான இலக்கை அடைகின்றவர்கள், பரிசை அடைவார்கள் குணலட்ச ணத்திற்கான இலக்கினை அடைய தவறுகின்றவர்கள், பரிசை அடையமாட்டார்கள். ஆகவே

முதலாவதாக அடையப்பட வேண்டிய "இலக்கினை" மறந்து (அ) புறக்கணித்து (அ) அலட்சியம் பண்ணி, பரிசுக்காக ஓடுவது என்பது மிக அபாயமான தவறாகக் காணப்படும்.

"ஜெயம்கொள்பவர்களெனத்" தெய்வகீ அங்கீகரிப்பை அடைவதற்கும், "நல்லது" என்ற கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதற்கும் வேண்டி, நாம் குணலட்சணத்திற்கென்றுள்ள ஒரு குறிப்பிட்ட இலக்கை அல்லது தரநிலையை அடைவது அவசியம் என்ற கருத்தானது, அநேகருக்குப் பிரம்மிப்பாக இருக்கும். அநேகர் கிறிஸ்தவனுடைய ஓட்டம் என்பது, வெளியரங்கமான பாவத்தைத் தவிர்ப்பது மாத்திரமே என்ற எண்ணம் கொண்டிருக்கின்றனர் இன்னும் சிலர் மறைவான குற்றங்களையும்கூடத் தவிர்ப்பது என்பதே கிறிஸ்தவனின் ஓட்டம் என்ற எண்ணம் கொண்டுள்ளனர் இன்னும் சிலர், இன்னும் சற்று அதிகப்படியாகச் சென்று, தற்கால ஜீவியத்தின் அநேக நன்மைகளைத் தியாகம் பண்ண வேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ளனர் இன்னும் சிலர், இன்னும் சற்று அதிகப்படியாகச் சென்று, சீஷயத்துவத்திற்கான பரீட்சை என்பது கர்த்தருக்கு முழுமையாய்த் தங்களை ஒப்புக்கொடுப்பதும், நமது தலையாகிய கர்த்தருடைய சித்தத்திற்கென்று பூமிக்குரிய ஜீவனையும், அதன் நன்மைகள் யாவையும் முழுமையாய்ப் பலிசெலுத்துவதுமாகும் என்று அதிகமாகவே புரிந்துள்ளனர் ஆயினும் அநேகமாக யாருமே - நம்முடைய பலிசெலுத்துதல்கள், அனுபவங்கள், சுயத்தை வெறுத்தல்கள் யாவும் இறுதியில், தேவன் தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கு வைத்துள்ள குணலட்சணத்திற்கான "இலக்கிற்கு" நம்மைக் கொண்டுவந்து நிறுத்தும், இல்லையேல் கிறிஸ்துவுடன் ஆயிர வருட இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்துவத்திற்கான பரிசை அடைய முடியாது என்று சிந்தித்துப் பார்க்கவே இல்லை. கல்வாரியில் வைத்து நமது கர்த்தர் மரித்துக்கொண்டிருக்கும் கள்வனிடம் கொண்ட சம்பாஷணைக் குறித்த தவறுதலான விளக்கமே, குணலட்சணத்திற்கான "இலக்கு" குறித்து அல்லது நிர்ணயிக்கப்பட்ட தரநிலைக் குறித்துப் பார்க்கத் தவறுவதற்கு வழிவகுத்தது.

தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு அளிக்கப்படவிருக்கும் மாபெரும் ஆசீர்வாதங்களுக்கும், கனங்களுக்கும் தகுதியானவர்கள் யார் என்று தேவன் தீர்மானிப்பதற்கும், கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாகுவதற்கும், அவருடைய ஆயிர வருட இராஜ்யத்தில் பங்கடைவதற்கும் தகுதியானவர்கள் யார் என்று தேவன் தீர்மானிப்பதற்கும், கனத்தையும், மகிமையையும், அழியாமையையும்தேடுகினற்வாக்ளில்" உண்மையுள்ளவர்கள் யார் என்று தேவன் தீர்மானிப்ப தற்கும், "அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களும்" எனக் காணப்படுபவர்கள் யார் என்று தேவன் தீர்மானிப்பதற்கும், அவர் சில தரநிலையை (அ) பரிட்சையைக்கொண்டிருப்பது என்பது நியாயமான கருத்தாகவே இருக்கின்றது. இப்படியாக ஓர் இலக்கு இருக்கின்றது என்றும், வாஞ்சிக்கப்பட்ட பரிசை அடைவதற்கான நம்பிக்கையில் ஓடுகின்ற அனைவரும், அந்த இலக்கை நோக்கியே ஓட வேண்டும் என்றும், அந்த இலக்கினை அடைய வேண்டும் இல்லையேல் பரிசை இழக்க நேரிடும் என்றும் அப்போஸ்தலர் நம்முடைய ஆதார வசனத்தில் தெளிவாகக் கூறுகின்றார். மேலும் இந்தத் தரநிலையின் அடிப்படையில்தான் அப்போஸ்தலனும் தன்னை அளந்து பார்க்கின்றார் / மதிப்பீடு செய்கின்றார் என்றும் நாம் பார்க்கின்றோம் இன்னுமாக இவ்வசனத்தின் வார்த்தைகளை, தான் எழுதும் வேளையில், தான் இன்னமும் குணலட்சண-வளர்ச்சிக்கான அந்த இலக்கினை அல்லது தரநிலையினை எட்டிடவில்லை என்றும் குறிப்பிடுகின்றார். இப்படியான அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைப் பார்க்கும்பொழுது, இந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக்கும் அனைவரின் இருதயங்களும், தாங்கள் ஓடி அடைய வேண்டிய இந்த இலக்கினைத் தெளிவாகப் பார்க்க வேண்டும் என்ற வாஞ்சையினால் விழிக்கின்றன் நம் அனைவரையும் அதிக பொறுமையுடனும், அதிக விடாமுயற்சியுடனும் ஓடுவதற்குத் தூண்டிவிடுகின்றது; இன்னுமாக நமக்கு முன்பாக நம்முடைய தேவனாகிய கர்த்தர் வைத்துள்ள பிரம்மாண்டமான இலக்கினை நோக்கின, நம்முடைய முன்னேற்றத்தினை நாளுக்கு நாள் கவனிக்கத்தக்கதாகவும் நம்மைத் தூண்டுகின்றது.

அப்போஸ்தலன் தன்னுடைய மனதில் ஓட்டபபந்தய வீரர்களைக்குறித்துச் சிந்தனைக் கொண்டிருந்ததை நம்மால் கவனிக்க முடிகின்றது, மேலும் அவர் விவரித்துள்ளவைகளில் ஆழமான அர்த்தம் இருப்பதையும் நம்மால் காண முடிகின்றது: (1) ஓட்டப்பந்தய வீரர்கள், பந்தய சாலைக்குள் முறையாய்ப் பிரவேசிக்க வேண்டும் இதுபோலவே நாமும் ஒரே வாசல் மூலமாக, அதாவது நம்மை மீட்டுக்கொண்டு, தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமான்களாக்கிட்ட விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாகவே முறையாய்ப் பந்தய சாலைக்குள் பிரவேசிக்க வேண்டும். (2) பந்தய சாலைக்குள் வருபவர்கள், ஓட்ட பந்தய வீரர்களென முறையாய்ப் பதிவு பண்ணப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் இவர்கள் தங்களுடைய நோக்கத்தை உறுதியாய்த் தெரிவிக்க வேண்டும், இல்லையேல் இவர்கள் பந்தயத்தில் இருக்க முடியாது; இப்படியாகவே நம்முடைய விஷயத்திலும்கூட ஆகும் “விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டும்”, இந்த ஓட்டப்பந்தயம் மற்றும் இதற்கான பரிசு தொடர்புடைய நமக்கான சிலாக்கியங்கள் குறித்துத் தகவல் அறிந்தும் உள்ள நிலைமையில், நாம் நமது நோக்கத்தைக்குறித்து அறிக்கைச் செய்வது - அதாவது கர்த்தரோடு ஓர் உடன்படிக்கைப் பண்ணுவது என்பது நம் மீதான கடமையாக இருக்கின்றது; இப்படி முறையாய்ப் பந்தயத்திற்குள் பிரவேசிப்பது - அதாவது பூமிக்குரிய கிறிஸ்தவ சபைகளின் பதிவேடுகளில் இல்லாமல், மாறாக ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் ஸ்ரீ “பரலோகத்தில் நம் பேரெழுதப்பெற்றவர்களாய்க்” காணப்படுவது என்பது நம் மீதான கடமையாக இருக்கின்றது. (எபிரெயர்12:23).

ஓட்டப்பந்தய வீரர்களுக்குப் பரிசும்கூட அளிக்கப்படுகின்றது; ஆனால் இவர்கள் ஓடும் பந்தய சாலையில் இவர்கள் பார்க்கத்தக்கதாகப் பரிசு எங்கும் தொங்கவிடப்படுவதில்லை; இவர்கள் பரிசை நோக்கியல்ல, இலக்கினை நோக்கியே ஓட வேண்டும். கால்-மைல் தூர இலக்கும், அரை-மைல் தூர இலக்கும், முக்கால்-மைல் தூர இலக்கும் மற்றும் ஓட்டத்தின் இறுதியில் முழு ஒரு மைல் தூர இலக்கும் காணப்படுகின்றது; ஓடுகிறவர்களில் ஒவ்வொருவனும் தான், வழியில் வரும் ஒவ்வொரு இலக்கையும் கடந்துவருவதை கவனித்து, தன்னில் உற்சாகம்கொண்டு, பின்னர் இறுதியில் கடைசி இலக்கை, அதாவது பரிசிற்கான இலக்கினை அடைவது வரையிலும் இப்படியாகவே கவனித்தும், தன்னை உற்சாகப்படுத்திக்கொண்டும் ஓடிவருகின்றான். இப்படியாக வழிகளில் தாண்டிவரும் இலக்கினை அவன் கவனித்துக்கொள்வதும் , தரநிலையுடன் தன்னுடைய முன்னேற்றத்தைக் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதும், அவனுக்கு மிகுந்த கிரியா ஊக்கியாகவும் - அவன் விரைந்து ஓடுகையில் அவனுக்கு ஊக்கமாகவும் - அவன் மெதுவாக ஓடி பின்தங்கியிருப்பானானால் அவனுக்கு நினைப்பூட்டுதலாகவும் அமைகின்றது. இப்படியாகவே தேவனுடைய குமாரனுடன், அதாவது மகிமையின் கர்த்தருடன் உடன்சுதந்திரம் என்று தேவன் வாக்களித்திருக்கும் மாபெரும் பரிசைப் பெற்றுத்தரும், அந்த இலக்கினை நோக்கி, இடுக்கமான வழியில் ஓடிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ ஓட்டபப்ந்தய வீரனுக்கும் காணப்படுகின்றது. நம்முடைய வழியில் நாம் கடந்துவந்துள்ள இலக்கினை நாம் கவனிக்கும் போதும், நம்முடைய வளர்ச்சியைக்குறித்து நாம் உணர்ந்துகொள்ளும் போதும் நமக்கு உற்சாகம் ஏற்படுகின்றது. நாம் பரிசிற்கான இலக்கினை, அதாவது பரிசைப் பெற்றுத் தரும் இலக்கினை நெருங்கி, நெருங்கிக் கிட்ட வரும்போது நமக்கு உற்சாகம் ஏற்படுகின்றது. தன்னுடைய ஓட்டத்தில் அஜாக்கிரதையாகவும், அலட்சியமாகவும், மெத்தனமாகவும் காணப்பட்டால், தன் சார்பிலான சொந்த அலட்சியமே, மெத்தனமே, கவனமற்ற போக்கே தான் பரிசை இழந்துபோவதற்குக் காரணமாகிவிடும் என்று அறியும் “அறிவைக்காட்டிலும்,” வேறு எதுவும் ஒருவனுக்குப் பெரிய அளவிலான உந்துதலாய் இராது.

**R2754 : page 8**

## நம்முடைய தேவனால், நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள குணலட்சணத்திற்கான இந்த மாபெரும் இலக்கு எது?

இது பல்வேறு பெயர்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று நாம் பதிலளிக்கின்றோம் உதாரணத்திற்கு “பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல,

நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்"(மத்தேயு 5:48) என்று நமது கர்த்தர் இயேசு கூறினபோது அந்த இலக்கினையே அவர் குறிப்பிட்டார். "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (உரோமர் 8:29) என்று அப்போஸ்தலன் கூறினபோது, அதே இலக்கானது குறிப்பிடப்படுகின்றது. இந்த இரண்டு வசனங்களும் வார்த்தைகளில் வித்தியாசப்பட்டாலும், இவை இரண்டும் பொருள் விஷயத்தில் ஒன்றே. "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்"; "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (உரோமர் 8:4; 13:10) என்று அப்போஸ்தலன் கூறுகையில் அதே இலக்கானது மறுபடியுமாகக் குறிப்பிடப்படுகின்றது. இப்படியாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் காணப்பட வேண்டிய கிறிஸ்தவனுக்கான குணலட்சணத்தினுடைய இலக்கானது, எவைகளை உள்ளடக்கியிருக்கின்றது என்பதற்கான விளக்கத்தை நாம் பெற்றிருக்கின்றோம் அது தெய்வீகத்தன்மை / தேவனுக்கு ஒத்த சாயல், கிறிஸ்துவுக்கு ஒத்த சாயல், அன்பு ஆகும். பரிசுத்தமுள்ளவர்களும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமான கர்த்தருடைய ஜனங்கள், தேவன் கொண்டிருப்பதும், நமது கர்த்தர் இயேசுவினால் வெளிப்படுத்தப்பட்டதுமான அன்பின் தன்மைகளை அல்லது அதே குணங்களை அடைய வேண்டும் என்பதே அவசியமாய் உள்ளது.

"சுபாவத்தின்படி கோபாக்கினையின் பிள்ளைகளாக" நாம் இருக்க, நாமும் தேவன் அன்பு செய்வது போன்றும், கிறிஸ்து அன்பு செய்வது போன்றும் அன்பு செய்யத்தக்கதாக, இவ்வளவு உயர்வான தரத்தினை (அ) குணலட்சணத்தினுடைய இலக்கினை எப்படி அடையக்கூடும்? என உங்களில் சிலர் கேட்கலாம். மாம்சத்தின் விஷயத்தில் இந்த உயர்வான அளவுகோலை எட்டிவிடலாம் என ஒருபோதும் எதிர்பார்க்க வேண்டாம் என்று நாம் பதிலளிக்கின்றோம், காரணம் நாம் இந்த அழிந்துபோகும் சரீரங்களில் காணப்பட்டு, மாம்சத்தின் மூளையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள் காணப்படுவது வரையிலும், விழுகையின் காரணமாகவும், ஆறாயிர வருடங்களாகச் சாரீத்திலும் , மனதிலும், ஒழுக்கத்திலும் ஏற்பட்ட சீரழிவின் காரணமாகவும், நம்முடைய இனத்தை முற்றிலுமாய் ஆட்டுவிக்கும் சுயநலத்தினால் நாம் எதிர்க்கப்பட்டுக் கொண்டே இருப்போம்.

பூரணமான அன்பாகிய இந்த இலக்கை அடைவது என்பது, இருதயத்தில், சித்தத்தில், புதிய சித்தத்தில், அதாவது "மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால்" பரிசுத்த ஆவியின் மூலம் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சித்தத்தில் அடையப்பெறுகின்ற ஒரு காரியமாகவே இருக்கின்றது. இன்னுமாக நமது கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பக் கட்டங்களிலேயே, புதிய மனமானது இந்தத் தரநிலையை எட்டிவிடும் என்றும் நாம் எதிர்பார்க்கக்கூடாது. புதிய மனமானது, தேவனுடைய வார்த்தைகளில் உள்ள மகாமேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களின் மூலமாக தேவனால் ஏவப்படுகின்றதாக இருப்பினும், இதுவே நம்முடைய சொந்த சித்தமாக இருப்பினும் இது, இதன் கருவியும், வழியுமாகிய மனித மூளையினால் எல்லைக்குட்படுத்தப்படுகின்றது. ஆகவேதான் புதிய மனமானது தொடர்ந்து மாம்சத்திற்கு எதிராக யுத்தம் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும் என்றும், புதிய மனதின் வெற்றி என்பது மாம்சத்தின் சாவு என்றும், இந்தப் புதிதாய் ஜெநிப்பிக்கப்பட்ட சிந்தையானது, உயிர்த்தெழுதலினுடைய மாற்றத்தின்போது அதற்கே உரிய ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றுக்கொள்வது வரையிலும், இந்தப் புதிய மனம் உண்மையாகப் பூரணமடைய முடியாது என்றும் அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். ஆனால் முதலாம் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய ஒரு சரீரத்தைப் பெற்றுக்கொள்வது என்பது பரிசைப் பெற்றுக்கொள்வதாகக் காணப்படும் என்பதினால், புதிய மனமானது இந்த அழிவுக்குரிய சரீரத்தில் (அ) மண்பாண்டத்தில் காணப்படும் போதுதான் இலக்கினை நோக்கின ஓட்டமும், இலக்கினை அடைவதும் நிறைவேற்றப்பட வேண்டும் (2 கொரிந்தியா; 5:2-4).

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், புதிய மனமானது வளர வேண்டும், விருத்தியாக வேண்டும். அப்போஸ்தலன் புத்திமதி கூறுவதுபோன்று, நாம் புதிய சிருஷ்டிகளென, கிருபையிலும், அறிவிலும், தேவனுடைய அன்பிலும் வளர வேண்டும் இந்த வளர்ச்சியானது, மேலே விவரிக்கப்பட்டுள்ள ஓட்டப்பந்தயத்தின் காரியத்திற்கு இணையாய் இருக்கின்றது. பரிசை அடைய வேண்டுமெனில், இலக்கினை நாம் அடைவது வரையிலும், நாம் நாளுக்குநாள், வாரத்திற்கு வாரம், வருடத்திற்கு வருடம் இலக்கை நோக்கி, நெருங்கி, நெருங்கி ஓட வேண்டும். காலம் ஒரு பொருட்டல்ல, ஏனெனில் சிலர் நீண்ட காலம் ஓட்டம் ஓடியும், ஆவியின் கிருபைகளின் மொத்த சாரமாகிய அன்பு எனும் இலக்கின் வளர்ச்சியில், குறைவான வளர்ச்சியையே பெற்றிருக்கின்றனர் என்பதை நாம் அறிவோம்.

இன்னும் சிலர், இடுக்கமான வழியில் குறைவான வருடங்கள் ஓடியிருந்த போதிலும், மிகுந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளதையும் நாம் அறிவோம் இவர்கள் கிருபைமேல் கிருபை, அறிவின்மேல் அறிவு, மகிமையின்மேல் மகிமை அடைந்து, வேகமாக இலக்கினை நெருங்குவதையும் நாம் கண்டிருக்கின்றோம். இன்னும் நமது சிறப்பான மனித கணிப்பின்படி பார்க்கையில் சிலர் இலக்கினை எட்டியும் இருக்கின்றனர் இவர்களில் சிலர் மிக வேகமாக அடைந்துள்ளனர் என்பதையும் நாம் அறிவோம்.

இந்தப் பாடத்தைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளத்தக்கதாக, நம்முடைய இருதயங்களில் இந்த அன்பு எனும் பண்பு எவ்வளவு சிறியதான ஆரம்பத்தைக்கொண்டிருந்தது என்பதை நாம் கவனிக்கலாம் இப்படியாகப் பார்க்கும் விஷயங்களுடன் அநேகர் தங்களுடைய சொந்த அனுபவங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், தங்களுடைய குணலட்சணத்தில் பெரிய வளா;ச்சிகளைக் கண்டுபிடிப்பார்கள் என்றும், வழியில் உள்ள ஒவ்வொரு கால்-மைல் தூர இலக்கினை ஒன்றன்பின் ஒன்றாகத் தாங்கள் கடந்து வந்திருப்பதையும் கண்டுபிடிப்பார்கள் என்றும், தாங்கள் இன்னமும் பரிசிற்கான இலக்கினை ஏற்கெனவே அடையவில்லையெனில் , தாங்கள் வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கின்றனர் என்பதையும் கண்டுபிடிப்பார்கள் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

(1) நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பத்தில், அப்போஸ்தலர் கூறுவது போன்று, நாம் முதலாவதாகத் தேவனை அன்புகூராமல், “அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தவராக” காணப்பட்டார் அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்ததே நம்மை அவர்பால் கவர்ந்த காரியமாக இருக்கின்றது (1 யோவான் 4:19). இவ்வளவு பெரிய விலைக்கொடுத்து நம்மை மீட்குமளவிற்கும், நமக்கு இத்தனை பெரிதான இரட்சிப்பினை அருளும் அளவுக்கும், தேவன் நம்மை இவ்வளவாய் அன்புகூர்ந்தபடியால்.... இதற்குக் கைமாறாக நாம் செய்யும் காரியம் சிறியதே என்றும், அவ்வன்பிற்குப் பிரதிபலனாக அவரை அன்பு செய்வதும், அவருக்கு ஊழியஞ்செய்வதும் நம்முடைய கடமையாக இருக்கின்றது என்றும் ஒருவகையான நீதியின் உணா;வானது நம்மிடத்தில் தெரிவித்ததாய் இருந்தது. இப்படியாக ஆரம்பித்த அன்பை நாம் கடமை-அன்பு என்று அழைக்கின்றோம். இப்பொழுது நாம் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்திருக்கும் காரணத்தினால், மேலானதாகவும், குணலட்சணத்தில் அதிகம் முன்னேற்றம் அடைந்ததாகவும் காணப்படும் இன்றுள்ள தேவனுக்கான நம்முடைய அன்பிலுள்ள அநேகம் அம்சங்கள், ஆம்பத்தில் நம்மிடத்தில் காணப்பட்ட இந்தக் கடமை-அன்பில் காணப்படாமல்தான் இருந்தது. “கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது (பிரதி அன்பை எங்களிலிருந்து வெளிக்கொணர்கின்றது); ஏனென்றால், எல்லாருகக் ரகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் (தெய்வீகத்தீர்ப்பின், சாபத்தின் கீழ்) மரித்தார்கள் என்றும் (இயேசுவினுடைய மீட்பின் மீதான விசுவாசத்தின் காரணமாய் நீதிமானாகக்பட்டவார்ளாகிய) பிழைத்திருக்கிறவர்கள் இனித்

**R2754 : page 9**

தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும் படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்” (2 கொரிந்தியா; 5:14,15) என்று

கூறகையில் இந்தக் கடமை அன்பைக்குறித்துதான், அப்போஸ்தலன் பேசுவதாகத் தோன்றுகின்றது. அன்பு செய்ய வேண்டும் என்கிற இந்த அன்பானது அல்லது கடமை-அன்பானது, தேவனிடத்திலுள்ள நம்முடைய அன்பின் முதலாம் மற்றும் இயல்பான / முதிராத மற்றும் எளிமையான வளர்ச்சியாகவும் - பூரண அன்பை நோக்கின ஓட்டத்திலுள்ள நம்முடைய ஆரம்பக்கட்டமாகவும் இருக்கின்றது.

(2) இப்படியாக நாம் கடமை அன்பைச் செயல்படுத்திக்கொண்டிருக்கையில், நாம் பாவத்தைத் தவிர்ப்பதன் மூலமாக மாத்திரமல்லாமல், இன்னுமாக அவருக்காகவும், சத்தியத்திற்காகவும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும் விஷயத்தில், கடமை அன்பிற்குக் கீழ்ப்படியும் விஷயத்தில், நமது பூமிக்குரிய நலன்களையும், உரிமைகளையும் பலிச்செலுத்துவதன் மூலமாயும் தேவனுக்கு நாம் கீழ்ப்படிய நாடிக்கொண்டிருக்கையில், நம்முடைய இருதயங்களில், நீதியின் கொள்கைகளுக்கான ஒரு மதிப்புணர்வைக் காணத்துவங்குகின்றோம் நாம் நீதி-நியாயத்தை, இரக்கத்தை, அன்பை விரும்ப ஆரம்பித்தோம் அதுவும் ஆரம்பத்தில் அன்பின் ஆர்வத்தினால் விரும்ப ஆரம்பிக்காமல், மாறாக தெய்வீகக் குணலட்சணம், திட்டம் மற்றும் பிரமாணத்தினுடைய மகிமையான பண்புகளின் மீதான மரியாதையின் நிமித்தம், நீதியை விரும்ப ஆரம்பித்தோம். இதுவே நம்முடைய முதலாவது கால்-மைல் தூர இலக்காகும் அதாவது நீதியின் கொள்கைகளின் மீதான அன்பாகும்.

(3) தெய்வீகமானவரில் பூரணமாய்க் காணப்படுகிறதும் மற்றும் நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்களுக்கு, தெய்வீகமானவரை வெளிப்படுத்துகிறதுமான தெய்வீகக் குணலட்சணம் மற்றும் நீதியின் கொள்கையின் இந்த அம்சங்களை நாம் அதிகமதிகமாயக் கற்றுக்கொள்ளும் போது, அந்த அளவுக்குத்தக்கதாக (கடமையின் அடிப்படையில் இல்லாமல், கொள்கையின் அடிப்படையிலான) தேவன் பேரிலான உண்மையான அன்பானது, நம்முடைய இருதயங்களுக்குள் கடந்துவருகின்றது. இங்கு நாம் ஓட்டப்பந்தயத்தில் இரண்டாம் கால்-மைல் தூர இலக்கினை, அதாவது தேவனுடைய குணலட்சணத்தை அன்புகூருவது எனும் இலக்கினை அடைகின்றோம். தேவனுடைய குணங்களின் நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும், ஆழத்தையும் நாம் இன்னமும் உணா;ந்துகொள்ளவில்லை என்றபோதிலும், நாம் தேவனை, உண்மையான விதத்தில் அன்புகூர ஆரம்பிக்கின்றோம் அதாவது அவர் நமக்கு என்ன செய்துள்ளார் என்பதை உணா;ந்துகொண்டதினால் மாத்திரமல்லாமல், விசேஷமாக அவர் யார் என்று உணர்ந்துகொண்டதினாலும், அவருடைய குணலட்சணத்தை உணர்ந்து கொண்டதினாலும் நாம் அவரை அன்புகூர ஆரம்பிக்கின்றோம்.

(4) தேவனே அனைத்துக் கிருபைகளுக்கும், பண்புகளுக்கும் பிரதிநிதியாக இருக்கின்றார் என்பதினாலும், அனைத்து உண்மைக்கும் பிரதிநிதியாக இருக்கின்றார் என்பதினாலும், நீதிக்குப் பிரதிநிதியாக இருக்கின்றார் என்பதினாலும், அனைத்து அநீதிக்கும், அநியாயத்திற்கும் எதிரானவர் என்பதினாலும், தேவன் பேரில் நமக்கு ஏற்பட்ட அன்பானது, நம்முடைய சக மனுஷர்கள் மத்தியிலும், நம்முடைய சொந்த குணலட்சணங்களின் விஷயத்திலும் இந்தக் கொள்கைகளை நாடுவதற்கும், பின்பற்றுவதற்கும் ஏதுவாக நம்மை வழிநடத்துகின்றது. நாம் சத்தியத்தையும், உண்மையையும், உயர்வான குணலட்சணத்தையும் எங்கெல்லாம் கண்டு, அதை அன்புகூர ஆரம்பித்தோமோ, இவைகளில் சில மனுக்குலத்திடத்திலுங்கூடப் புள்ளிகளாகவும், மெல்லிய தடயங்களாகவும் இருப்பதைக் கண்டுபிடித்தோம் தேவனுடைய பிரமாணமானது, பிதாவாகிய ஆதாமின் இருதயத்தில் எழுதப்பட்டிருந்தது என்பதையும், அது ஆதாமின் பிள்ளைகளுடைய இருதயங்களிலிருந்தும், மனசாட்சியிலிருந்தும் பெரிதளவில் அழிக்கப்பட்டிருந்த போதிலும், முற்றிலுமாக அழிக்கப்படவில்லை என்பதையும் நாம் கண்டோம் கடந்த 18 நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவ மார்க்கத்தினுடைய செல்வாக்கின் கீழ், ஓரளவுக்கு இந்தப் பூரணமான பிரமாணத்தினுடைய சில அம்சங்கள், மனுஷர்கள் மத்தியில் மங்கலாகத் தென்படவே செய்கின்றது என்பதையும் நாம் கண்டோம்.

ஆனால் இந்த நீதியின் கொள்கையின் மீது பெருகிக்கொண்டு வரும் அன்பினைப் பெற்றிருக்கும் நிலைமையில், நாம் சுற்றி ஏறெடுத்துப் பார்த்தபோது - சுபாவத்தின்படியான மனுஷரில் எதுவும் திருப்திகரமாக இருக்கவில்லை; இன்னுமாக தேவபக்தியாய் இருக்கின்றார்கள் என்றும், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்கள் என்றும் தங்களை அறிக்கைப்பண்ணிக் கொள்கின்றவர்களிலும் எதுவும் திருப்திகரமாக இருக்கவில்லை. இவர்கள் எல்லோரும் நம்மைப் போலவே பூரணத்திலும், தேவனுடைய மகிமையின் பிரதிபலிப்பிலும் குறைவுப்பட்டிருப்பவர்கள் என அறிந்துகொண்டோம். ஆனால் நீதியின் கொள்கைகளுக்கான அன்பு நம்முடைய இருதயங்களில் அதிகமதிகமாய்க் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தபடியால், நாம் பெருமூச்சுவிட்டுத் தவிக்கும் சிருஷ்டிகள் அனைத்தின் மீது அனுதாபத்தைக் காட்டுவதற்கும், “சகோதரரை அன்புகூருவதற்கும்” கற்றுக்கொண்டோம் ஏனெனில் நம்மை ஜெநிப்பித்த தேவனாலும், சத்தியத்தின் ஆவியினாலும் இந்தச் சகோதர சகோதரிகளும் ஏவப்படுகின்றார்கள் என்பதை அறிந்து, உணர்ந்துகொள்கின்றோம் இந்தச் சகோதர சகோதரிகளில் சிலர், கடமை-அன்பை மாத்திரம் பெற்றிருப்பவாக் ளாக, நாம் முன்பு போராடினது போன்று, போராடுவதைக் காண்கின்றோம் இன்னும் சிலர் கடமை அன்பைக்கடந்து, நீதியின் கொள்கைகளை உணர்ந்துகொண்டு, அக்கொள்கைகளை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்து, இந்த நீதியின் கொள்கைகளின் பிரதிபலிப்பாய் இருக்கும் தேவனை அன்புகூருகிறவர்களாக ஆகியுள்ளனர். இந்தச் சகோதர சகோதரிகள் படிப்படியாகத் தெய்வீகத் தரநிலைக்கு நெருங்கிக்கொண்டிருக் கின்றார்கள், அதாவது இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றனர் என்று நாம் உணர்ந்த போது, இவர்களிடத்திலும், மேலும் பாவம், பெலவீனம், எதிராளியானவன் மற்றும் அவனுடைய தந்திரங்களுக்கு எதிரான இவர்களுடைய யுத்தத்திலும் நமக்கு அக்கறை ஏற்பட்டது. நாம் இடுக்கமான வழியில் முன்னேறிச் செல்வதற்கு நாடுமளவுக்குத்தக்கதாக, சக சகோதர சகோதரிகளின் நன்மைக்கடுத்த விஷயங்களிலும், அவர்கள் ஜெயங்கொள்ளும் விஷயங்களிலும் அதிகமதிகமாய் அக்கறை காட்டுபவர்களாய் இருந்தோம். சகோதரருக்கான இந்த அன்பை, நாம் ஆரம்பத்தில் பெற்றிருக்கவில்லை; இந்த அன்பின் வளர்ச்சி என்பது, இலக்கினை நோக்கின நம்முடைய ஓட்டத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும் இப்படியான அன்பை அடைவது என்பது மூன்றாம் கால்-மைல் தூர இலக்கினை அடைவதாக இருக்கும். சகோதரருக்கான இந்த அன்பு என்பது “சகோதரருக்காகத் தங்களுடைய ஜீவனையே

**R2755 : page 9**

ஒப்புக்கொடுக்க விரும்பும்” கட்டத்தை எட்டிடும், மாபெரும் முன்னேற்றத்தை அடைந்தாலும், இது நாம் ஓடிக்கொண்டிருக்கும் இலக்கை முழுமையாய் அடைந்ததாக இருக்காது (1 யோவான் 3:16).

(5) “பரிசை அடைவதற்கான இலக்கு” என்பது, அன்பில் அடைய வேண்டிய இன்னும் மேன்மையான நிலையாகும் நம்முடைய சத்துருக்களைச் சிநேகிக்கும் அன்புதான் மிக உயர்வான அன்பின் நிலை என்று வேதவாக்கியங்கள் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன் நம்முடைய சத்துருக்களைச் சிநேகிப்பது என்பது, சத்துருக்களைக் குறித்து ஒருபக்கத்தில் தீமையாய் எண்ணிக்கொண்டும், அதேசமயம் அவர்களை இன்னொருபக்கம் சகித்துக் கொண்டும், அவர்களுக்கு நாம் பதிலுக்குப்பதில் பாதிப்பு ஏற்படுத்தாமல் இருப்பதும் மாத்திரமாக இல்லை; மாறாக இதையும் தாண்டி, நம்முடைய கிரியைகளில் மாத்திரமல்லாமல், நம்முடைய வார்த்தைகளிலும், நம்முடைய எண்ணங்களிலும், நம்முடைய உணர்வுகளிலும், சகல கோபத்தையும், குரோதத்தையும், பகைமையையும், பொறாமையையும், வாக்குவாதத்தையும் முழுமையாய்ப் புறம்பே கழித்துப் போடுவது என்பதே சத்துருக்களைச் சிநேகிப்பதாகும். இது நம்முடைய இருதயங்களில், அன்பானது முற்றிலும் ஜெயம்கொண்ட நிலையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது நாம் தேவனைப் பிரதானமாய் அன்புகூர்ந்து, அவருடைய குணலட்சணத்தில் விளங்கும் கொள்கை மீதான அன்பின் நிமித்தம் அவருக்கான ஊழியத்தில் பலியாகுவதை விரும்புவது மாத்திரமல்லாமல், சகோதரர்களுக்காக நாம் கொண்ட அன்பானது, அவர்களது உணா;வுகள் மற்றும் நலன்களின் விஷயத்தில் நம்மைக் கவனமாய் இருக்கச் செய்ததோடு, அவர்கள் பொருட்டு நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கும்,

அவர்களைத் தீமையினின்று விடுவிப்பதற்கும் அல்லது அவர்களுடைய பாதையில் இடறலின் கல்லைப் போடுவதைத் தவிர்ப்பதற்கும் நம்மை ஆயத்தமாய் இருக்க பண்ணினது மாத்திரமல்லாமல், இதோடுகூட ஒவ்வொரு அறிவுள்ள சிருஷ்டியை நாம் அன்புகூரத்தக்கதாகவும், வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் சகல மனுஷருக்கு நன்மைச் செய்வதிலும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மைச் செய்யத்தக்கதாகவும் தேவனுக்கான அன்பு, நம்முடைய இருதயங்களில் முழுமையாய் ஊற்றப்பட்டிருக்கும் (கலாத்தியர் 6:10).

ஆனால் அதற்கென்று நீதியின் உருவமாக இருக்கும் கர்த்தரிடத்திலும், கிறிஸ்துவின் மூலமாய்த் தங்களில் நிறைவேற்றப்பட்ட நியாயப்பிரமாணத்தினுடைய நீதியையும், அன்பையும் அடைய நாடும் சகோதரரிடத்திலும் நாம் கொண்டிருக்கும் அதே விதமான அன்பைத்தான், நாம் உலகத்தாரிடத்திலும் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது.

**R2755 : page 10**

உலகத்தாரிடத்தில் அனுதாபமான அன்பைக்கொண்டிருக்க வேண்டும் அதாவது தேவன்தாமே மனுக்குலத்தின் உலகத்திடம் செலுத்தும் இரக்கத்தையே நாமும் செலுத்த வேண்டும். “உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை“ (1 யோவான் 2:15) என்று அப்போஸ்தலன் கண்டிக்கிற விதத்தில், நாம் உலகத்தை அன்புகூர வேண்டும் என்ற அர்த்தமும் இல்லை. “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்“ (யோவான் 3:16) என்று வசனத்தில் சுட்டிக்காண்பிக்கப்படும் நிலையையே உலகத்தின் விஷயத்தில் நாம் அடைய வேண்டும். உலகமானது சீரழிவிலிருந்தும், பாவத்திலிருந்தும், பரிசுத்தத்திற்கும், தூய்மைக்கும், நீதிக்கும் உயர்த்தப்படுவதில் மாத்திரம் மகிழ்ச்சிகொள்ளாமல், இம்மாதிரியாக உயர்த்தப்படும் விஷயத்தில் வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் ஒத்துழைப்பதிலும் - அதாவது தேவனுடைய அன்பையும் , அவருடைய யுகத்திற்கடுத்ததிட்டம் நிறைவேறுவதையும் எதிர்ப்பார்த்துக்கொண்டு மாத்திரம் இருக்காமல், தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார் மூலமாக ஆயிர வருட யுகத்தில் ஒவ்வொரு சிருஷ்டியினிடத்திலும் கடந்துவரும் என்று வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதம் தொடர்புடைய அவருடைய திட்டத்தில், அவருடன் ஒத்துழைப்பதிலும் மகிழ்ச்சிகொள்ளும் தன்மையுடையதே உலகத்தின் மீதான அன்பாகும். இந்தப் பூரணமான அன்பும் , மற்றக் குணலட்சணங்களும், சத்துருக்களிடத்திலும்கூட, அதாவது நம்மைக் காயப்படுத்துகிறவர்களிடத்திலும்கூட, அதாவது கிறிஸ்துவின் நிமித்தமாகவும், நீதியின் நிமித்தமாகவும் நம்மைக்குறித்துத் தீமையாய்ப் பேசுகிறவர்களிடத்திலும்கூடச் செயல்படுத்தப்படுவது என்பதே ஓட்டத்தின் நான்காம்-மைல் தூர இலக்காகும், அதாவது பரிசிற்கான இலக்காகும்.

இலக்கினை நோக்கின நம்முடைய ஓட்டத்திலுள்ள வளர்ச்சியில் காணப்படும் இந்தப் பல்வேறு படிகளை நாம் கவனிக்க வேண்டும் என்றபோதிலும், நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில் ... இந்த உதாரணம் மிகத் துல்லியமாகப் பொருந்துகிறதில்லை, மாறாக இப்படியான வளர்ச்சியில் வரிசை என்பது இருப்பினும் அவை குறிப்பிடத்தக்க விதத்தில் நம் அனுபவங்களில் தெரிகிறதில்லை என்பதாகும்.. ..இதில் கடமை அன்பானது படிப்படியாக உயா; வகையான அன்பிற்கு வழிநடத்துகிறபோதிலும், அந்தக் கடமை-அன்பானது இறுதிபரியந்தம் தொடர்கிறதாகவே இருக்கின்றது. இந்த ஓட்டத்தில் ஓடுபவர்கள் மாம்சத்தின்படி பார்க்கப்படாமல், புதிய சிருஷ்டிகளாக, ஆவியின்படி, மனதின்படி, சிந்தையின்படி, நோக்கத்தின்படியே பார்க்கப்படுகின்றனர் என்பது தேவனுடைய கிருபையான ஏற்பாட்டின் பாகமாக இருக்கின்றது. நம்முடைய இருதயத்தில் நிரம்பியுள்ள உண்மையான அன்பின் ஆவியினுடைய நிரூபணத்தை ஒவ்வொரு கிரியையும், ஒவ்வொரு வார்த்தையும் கொடுக்கத்தக்கதாக, நம்மால் ஒருபோதும் மாம்சத்தில், பூரணமான அன்பின் இந்தப் பிரம்மாண்டமான இலக்கினை அடைய முடியாது.

சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் மாம்சத்தில் அதிகமான பெலவீனங்களும், குறைவுகளும் காணப்படுகின்றன் ஆகவே தங்களுடைய இருதயத்தின் உண்மையான உணர்வுகளை முழுமையாகவும், சீராகவும் வெளிப்படுத்துவதற்கு மற்றவர்களைவிட இயலாமையில் காணப்படுவர். ஆனால் தேவன் இருதயத்தைக் காண்பார் இந்த ஓட்டத்தில் ஓடுவது இருதயம் என்றே அவர் காண்கின்றார். சுவிசேஷத்தில் நமக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள இந்த இலக்கை, அதாவது நம்முடைய சத்துருக்களைச் சிநேகிக்கும், பூரணமான அன்பினுடைய இந்த இலக்கை இருதயமே அடைய வேண்டும் “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவா;கள் தேவனைத் தரிசிப்பார்கள்.”

நாம் இந்தப் பூரணமான அன்பே, பரிசை அடைவதற்கான இலக்கு என்று தெளிவாய்க் காண்கின்றபடியால் , நம்முடைய அனுதின ஜீவியங்களில் நாம் நாடுவதற்குரிய ஒன்றைக் கண்டிருக்கின்றோம் அதாவது தேவனுடைய கிருபையினால் நம்மால் அடையபட்டக்கூடியதும், இராஜ்யத்தில் பங்கு பெறத் தகுதியானவர்கள் என நாம் கருதப்பட வேண்டுமானால் நம்மால் அடையப்பட வேண்டியதுமான ஒரு நிலையை இங்குக் கண்டுகொண்டோம். கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கங்களைத் தேவன் மனம்போன போக்கில் / தன்னிச்சையாகத் தெரிந்தெடுக்காமல், உணர்ச்சிவசப்பட்டுத் தெரிந்தெடுக்காமல், மாறாக குணலட்சணத்தின் அடிப்படையிலும், இருதய வளர்ச்சியின் அடிப்படையிலும்தான் தெரிந்தெடுக்கின்றார் தம் முடைய குமாரனுக்கு ஒப்பான சாயலை அடைகின்றவர்களை, அதாவது பிதாவுக்குப் பிரியமானதாகவும், ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருக்கும் இந்தத் தரநிலையை, அதாவது பரிசிற்கான இந்த இலக்கினை அடைகிறவர்களையே அவர் தேர்ந்தெடுக்கின்றார் இப்படியான இலக்கினை அடைந்தவர்கள் மாத்திரமே, நமது கர்த்தருடன் உடன் சுதந்திரத்துவத்தை அடைவதற்கு உறுதியாய் நம்பிக்கைக்கொள்ளலாம். இந்த ஓட்டத்தில் ஓடும் ஒவ்வொரு நபரும் “பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவககு; கிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்” (எபிரெயர் 12:1) என்றுள்ள அப்போஸ்தலனின் புத்திமதியைப் பின்பற்றுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது; இவரே நாம் ஜெயங்கொள்வதற்குக் கிருபைத் தந்து, தம்முடைய வார்த்தையின் மூலமாகவும், தம்முடைய வழிநடத்துதல்கள் மூலமாகவும், ஓட்டத்தின் முடிவு பரியந்தம் நம்மைக் காத்துக்கொள்வார்.

பந்தய சாலையில் ஓடும் ஒவ்வொருவனும், இடுக்கமான வழியில் அடைந்துள்ள முன்னேற்றத்தின் விஷயத்தில் மற்றவர்களைப் பரிசோதித்துப் பார்க்காமல், தன்னையே சோதித்துப் பார்க்க வேண்டும் ஏனெனில் ஒவ்வொருவனும் கர்த்தரைத் தவிர, மற்றவர்களைக் காட்டிலும் தன்னுடைய சொந்த இருதயத்தின் நிலைமையையும், சொந்த மாம்சத்தின் பெலவீனத்தையும் நன்கு அறிந்தவனாக இருப்பான். ஒவ்வொருவனும் ஓட்டப்பந்தயத்தில் எந்த இடத்தில் தான் காணப்படுகின்றான் என்பதைக் கவனித்துப் பார்த்து, தான் ஓட்டத்தில் காணப்படுகிறதற்காகக் களிகூருவானாக் இன்னுமாக இப்படியாக இந்தஓட்டத்தில் ஓடுவதற்கு அழைக்கப்பட்டிருப்பதும், இந்த ஓட்டத்திற்குள் பிரவேசிக்கிறதற்குச் சிலாக்கியம் அடைந்திருப்பதும் மாபெரும் சிலாக்கியம் என எண்ணக்கடவன். நாம் ஒருவேளை முதலாம் கால்-மைல் தூர இலக்கினைக் கடந்திருக்கின்றோம் என்பதைக் கண்டுபிடிப்போமானால் களிகூர்ந்து, இன்னும் முன்னோக்கித் தொடருவோமாக. ஒருவேளை நாம் இரண்டாம் கால்-மைல் தூர இலக்கினைக் கடந்திருக்கின்றோம் என்று கண்டுகொள்வோமானால், இன்னும் அதிகமாய்க் களிகூருவோமாக, ஆனால் ஓடுவதில் தளர்வு / சோம்பல் காண்பிக்க வேண்டாம். ஒருவேளை நாம் மூன்றாம் கால்-மைல் தூர இலக்கினையும் கடந்திருக்கின்றோம் எனக் கண்டுகொள்வோமானால் நாம் இன்னமும் அதிகமாய்க் களிகூர்ந்து, ஊக்கமாய் முனகூ;னறுவோமாக் ஒருவேளை நாம் சத்துருக்களையும் உள்ளடக்கி அன்புகூரும், பூரணமான அன்பாகிய, நான்காம் இலக்கினை அடைந்துவிட்டோமானால், நாம் மிகுந்த சந்தோஷமடைய வேண்டியதே. நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், பரிசு நமக்குரியதேயாகும். ஆனால் அப்போஸ்தலர்

கூறுவது போன்று, "அனைத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்க வேண்டும்," சகல ஆயுதவர்க்கங்களுடன் நிற்க வேண்டும் மாபெரும் மேற்பார்வையாளர், பலன்களை அளிப்பவர், 'நல்லது உத்தமும், உண்மையும் உள்ள ஊழியக்காரனே; உன்னுடைய எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று நம்மிடம் கூறிடுவதற்கு முன்னதாக, நம்மை இலக்கிலிருந்து திசைத்திருப்பத்தக்கதாக பந்தய சாலையில் கடந்து வந்த சோதனைகள் போன்று, இலக்கினை எட்டிய பிற்பாடும் நம்மீது வரும் பல்வேறு பரீட்சைகளிலும் நாம் நிற்க வேண்டும் (எபேசியர் 6:13-17).

பூரண அன்பின் இலக்கினை அடைந்தவர்கள், தொடர்ந்து தங்களைக் காத்தருடைய ஊழியத்திலும், தங்களுடைய ஜீவியத்தைச் சகோதரருக்கான ஊழியத்தில் ஒப்புக்கொடுப்பதிலும், ஈடுபடுத்திக்கொண்டிருப்பது இன்றியமையாததாக இருக்கின்றது, ஏனெனில் காண்கின்ற தன்னுடைய சகோதரனை அன்புகூராதவன், தான் காணாத தேவனை அன்புகூருவதாக, எப்படிச் சான்று பகர முடியும்? (1 யோவான் 4:20). இவர்கள் தேவன் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கான பிரதிநிதியாக மாத்திரம் நிற்காமல், மாறாக கர்த்தருக்குள் பலமாய் இருப்பவர்களின் பிரதிநிதியாகவும், அவருடைய வல்லமையின் சத்துவத்திலும், அவருடைய வார்த்தையின் மீதான விசுவாசத்திலும் நின்று, பந்தய சாலையில் ஓடும் மற்றவர்களும் "இலக்கினை" அடையத்தக்கதாக மற்றவர்களையும் உற்சாகப்படுத்துவதில் ஆயத்தமாயும், விருப்பம் உள்ளவர்களாயும், திறமைமிக்கவர்களாயும் நிற்க வேண்டும். "ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம் எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக. சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்" (பிலிப்பியர் 3:15-17).

------------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com